2013 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க ஆவின் விற்பனை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து குறிப்பிட்ட இடத்தில் ஆவின் விற்பனை நிலையம் அமைக்க வேண்டுமென கோரிக்கை வரப்பெற்றால், உரிய ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணை பெற்று அமைத்துக் கொடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பாலகங்கள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சிக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

234—

அணையை விரிவுபடுத்துதல்

***7577—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், புரவிபாளையம் அணையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், புரவிபாளையம் அணையை விரிவுபடுத்த அரசு முன்வருமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார். தற்போது உடைந்த நிலையிலுள்ள இந்த புரவிபாளையம் அணைக்கு மேலே 15 கி.மீ. தொலைவிலே 2005 ஆம் ஆண்டு கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு தடுப்பணை கட்டப்பட்டு, அது பயன்பாட்டில் உள்ளது. அதனால் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றாலும், வல்லரசு போற்றும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, பழைய அணையைச் சீரமைப்பதால் கூடுதல் பயன்பெற வாய்ப்பு இருப்பின் இதுகுறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையேழு வள்ளல்கள் ஈரம் நிறைந்த ஈகை மனதுடன் அவர்கள் செய்த அரிய காரியங்களுக்காகவே வள்ளல்கள் என அவர்களை வரலாறு போற்றுகின்றது. அது முடியாட்சிக் காலம். ஆனால், குடியாட்சியிலும் தான் உழைத்து சம்பாதித்த அனைத்தையும் வாரி, வாரி வழங்கி, எட்டாவது வள்ளலானார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரின் ஒரே வாரிசாய், அவர் வழியில், ஒப்பாரும், மிக்காரும் இல்லாத முதல்வராய், (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்தத் தமிழர்களின் பாதுகாவலராய், நாளைய இந்தியாவை ஆண்டு வல்லரசாக்கும் நல்லாட்சி நாயகியாய், ஒன்பதாவது வள்ளலாக வாழும் எங்கள் தாய், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீரின்றி அமையாது உலகு' என்னும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, அந்த அணையின் முக்கியத்துவத்தைக் கருதி அப்பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று, பரிசிலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நன்றியினைக் காணிக்கை ஆக்குகிறேன். அதே பகுதியில், புரவிபாளையத்திற்கு அருகில் உள்ள சுங்கப்பாறை அணையும் பழுதுபட்டுக் கிடக்கின்றது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரிசெய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசிலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *உலகில் வேறு எங்கும் இல்லாத, அளப்பரிய திட்டங்களை வழங்கி, உலகிற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் காணிக்கை ஆக்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

235—

பதிவுக் கட்டணம்

***7630—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—